★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 24உ புதன் (6–6–56) ★ ★ வெளியூர்: வைகாசி 25உ வியாழன் (7–6–56) [இதழ் 30

6 முதல் 14 வயதுவரை இலவசக் கல்வி

ம. பி. சர்க்கார் நடவடிக்கை

நாகபுரி, ஜூன் [illegible]

இந்த ஜூன்—ஜூலைத் திங்களில் துவங்கும் பள்ளி ஆண்டு[illegible] மத்தியப் பிரதேச மாநிலமெங்கும் 6 முதல் 14 வயதுவரையுள்ள பிள்ளைகளுக்கு சம்பளம் எதும் வாங்காமலேயே இலவசமாகக் கல்வி [illegible]

(5-ம் கலம் பார்க்க)

உரிமை கோரி இலங்கைத் தமிழர் அறப்போர்!

அறப்போர் வீரர் மீது மொழிவெறி கொண்ட சிங்களவர் தாக்குதல்

மூன்று எம்.பி.க்கள் உட்பட பலருக்குக் காயம்

தமிழுக்கு சமநிலை வழங்க மறுப்பு

பண்டார நாயகாவின் 'முற்போக்கு' மசோதா

இலங்கையில் தமிழர் கொதிப்பு

கொழும்பு, ஜூன் [illegible]—

சிங்களத்தை மட்டுமே இலங்கையின் ஆட்சிமொழியாக்குவது என்ற பண்டார நாயகா சர்க்காரின் ஆதிக்கவெறிக் கொள்கையை எதிர்த்து, அமைதியாக 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபட்ட தமிழர்கள்மீது, சிங்களமொழி வெறியர்கள் தாக்குதல் நடத்தி, பலரைப் படுகாயப்படுத்தியிருக்கிறார்கள்.

இன்று, மக்கள் சபையில், சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்குவது என்றும், 1960 டிசம்பர் 31-ந்தேதி யன்று முதல் சிங்கள மொழியில் மட்டுமே நிர்வாகம் நடைபெறும் என்றும் விதிக்கும் மசோதா ஒன்றினை பிரதம மந்திரி பண்டாரநாயகா கொண்டுவந்திருக்கிறார்.

இந்த மசோதா கொண்டுவருவதை ஒட்டித்தான், இதை எதிர்த்து, தமிழ் மக்கள் அமைதியான கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பெடரல் கட்சியைச் சேர்ந்த தமிழர்கள் இந்தக் கிளர்ச்சியைத் துவக்கி நடத்துகிறார்கள்.

மக்கள்சபைக் கட்டிடத்திற்கு 300 கெஜ தூரத்திற்கு அப்பால், தமிழர் 'சத்தியாக்கிரகம்' ஆரம்பமாயிற்று; ஆனால் கொழும்புவில் உள்ள சிங்கள வெறியர்கள், அறப் போரில் ஈடுபட்டிருந்தோர்மீது கற்களை எறிந்து தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

மூன்று மக்கள் சபை உறுப்பினர்கள் உட்பட 16 பேர்களுக்குப் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது.

நிலை கட்டுக்கடங்காது போகவே, போலீசார் தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

உடனே—மக்கள் சபை கூடுவதற்கு ஒரு மணி முன்பாகவே 'அறப்போர்' நிறுத்தப்பட வேண்டியதாகி விட்டது.

பின்னர், மக்கள் சபைக்குச் செல்ல விரும்பிய தமிழ் உறுப்பினர்கள் வழி மறுத்துத் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

இரண்டு தமிழ் உறுப்பினர்கள் பலத்த காயங்களுடன் சபையில் அமர்ந்திருக்கின்றனர்.

ஒரு உறுப்பினர் படுகாயமுற்றதால், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாராம்.

கூட்டம் முடிந்த பின்புகூட தமிழ் உறுப்பினர்கள் வெளியேறி வீட்டிற்குச் செல்ல முடியாத வகையில், கல்லெறிதல் போன்ற இழிசெயல்களில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர், சிங்கள வெறியர்கள்!

கொழும்பில் மட்டுமின்றி தீவெங்கணும் தமிழர்கள் பெரும் பகுதியாக வாழுகிற பிரதேசங்களில் எல்லாம் கடையடைப்பு—அதோடு பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது. தமிழர் தம் இல்லங்கள், கடைகள் எல்லாம் கருப்புக் கொடிகளைத் தாங்கி நின்றிருக்கின்றன.

மக்கள் சபையில் இது குறித்துப் பேசிய பிரதமர் பண்டார நாயகா, 'மொழி வெறியை வளர்த்தவர் கொத்தலாவலை தான்' என்று குற்றம் சாட்டினாராம்.

கொத்தலாவலை, சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்கிவிடுவதாகத் தேர்தல் காலத்தில் பேசியதாகவும், ஆனால், தான், சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாககுவதோடு தமிழ் மொழியையும் அரசாங்க உபயோகத்திற்குச் சிறிது சிறிது பயன்படுத்த வழி செய்வதாயும் தேர்தலின்போது தான் கூறியதாகவும் பண்டார நாயகா கூறியுள்ளார்.

பலாத்காரம், எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும், அதைத் தான் அனுமதிக்க முடியாது என்றும் அவர் கூறினாராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கையில் தமிழர் - அன்றும் இன்றும்!

★

"ஒரு காலத்தில், இலங்கையில், தமிழர்தான் முதலிடம் பெற்று இருந்தார்கள்; தமிழ் மொழியின் உதவியால்தான் இலங்கையில் சிங்கள மொழி வளர்ச்சி அடைந்தது; இன்று அங்கே தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகிறது; தமிழர்களால் நடத்தப்படவிருக்கும் உயிர்ப் போராட்டத்திற்குத் தாயகத் தமிழர்கள் முழு ஆதரவு தருவார்களென நம்புகிறேன்,"

என்று, மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா 6-ம் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய இலங்கை—சுன்னாகம் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த திரு. எஸ். நடேசபிள்ளை) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

10500 பேர் உயிர்த் தியாகம்

விடுதலைக்காக அல்ஜீரிய மக்கள் தந்துள்ள விலை

அல்ஜியர்ஸ், ஜூன் 4—

அல்ஜீரிய விடுதலைப்போராட்டம் 1954 நவம்பர் திங்களில் துவங்கியது. அந்நாளிலிருந்து 1956 ஜூன் திங்கள் 1-ந்தேதி வரை 19 திங்களில் விடுதலை இயக்கத்தினர் 10,500 பேர் உயிர்த் தியாகம் செய்திருக்கின்றனர்; 3,900 பேர் பிரெஞ்சுக்காரரால் பிடிபட்டிருக்கின்றனர்; 770 விடுதலை விரும்பிகள் காயமடைந்திருக்கின்றனர் எனக் கணக்கிடப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் போராட்டப்போர் துவங்கினதிலிருந்து சுமார் 225 ஐரோப்பியர்களும், 1,760 முகமதியர்களும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும், காயமடைந்தோர் 145 ஐரோப்பியர்களும் 1,200 முகம்மதியர்களும்தான் என்றும், 74 ஐரோப்பியர்களும், 590 முகம்மதியர்களும் காணாமற் போய் விட்டனர் என்றும் செய்தியறிந்த வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனராம்.

பிரெஞ்சு பாதுகாப்புப் படையினர் 1,085 பேர் இறந்துவிட்டனரென்றும், 2,370 பேர் காயமடைந்தனரென்றும், படையை விட்டோடியவர்கள் உட்பட சுமார் 600 பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டசபை குமாஸ்தாக்கள் மனவெறுப்பு?

பயங்கரமான அரசியல்வாதிகளிடமிருந்து பாதுகாப்பு கிடைத்தாலன்றி, தாங்கள் பணியாற்றுதலினின்றும் விலகிவிடுவதாக, ஜப்பான் பார்லிமெண்டின் குமாஸ்தாக்கள், மேல் சபைத் தலைவருக்குத் தெரிவித்துள்ளாராம்.

ராஞ்சுக்கு 20 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில், ஆறு அங்குலம் நீளமுள்ள காட்டு மூலிகைச் செடியொன்று இரவு நேரத்தில் ஒளிவீசுகிறதாம்!

★

மூன்று கிழமைகளில் 2,500 பேர் பலி

அல்ஜீரியாவில் விடுதலைக் கிளர்ச்சி தீவிரம்

பல பகுதிகள் விடுதலை இராணுவத்தின் ஆட்சிக்கு உட்பட்டுவிட்டனவாம்!

அல்ஜீரியா, ஜூன் 5—

கடந்த 18 மாதங்களில் வேறெப்போதும் இல்லாத அளவு, ஒரே நாளில் 400 அல்ஜீரிய மக்களை பிரெஞ்சு இராணுவத்தினர் வேட்டையாடிய சம்பவம் இரண்டு தினங்களுக்கு முன்பு நடைபெற்றிருக்கிறதாம்.

அல்ஜீரிய தீவிரவாதிகள் அமைத்துள்ள விடுதலை இராணுவம், அல்ஜீரியாவின் பல பகுதிகளில் 'விடுதலை ஆட்சி'யினைப் பிரகடனப்படுத்தியிருப்பதாகவும், அவற்றில் சில பிரதேசங்களை, இப்போது பிரெஞ்சு இராணுவத்தினர் திரும்பவும் கைப்பற்றிவிட்டதாகவும் தகவல் தரப்படுகிறது.

தீவிரவாதிகளின் நிர்வாகத்திலிருந்த பிரதேசத்தில் சுமார் 200 சதுர கிலோ.மீட்டர் பரப்பை பிரெஞ்சுக்காரர்கள் நேற்று முன்தினம் கைப்பற்றிவிட்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது

பிரெஞ்சு இராணுவத்தில் முன்பு ஒரு அதிகாரியாக இருந்த ஹாமி ரெளசே என்பவர், இப்போது விடுதலை இராணுவத்தின் ஒரு பிரிவுக்குத் தலைவராக விளங்குகிறார் என்றும், அவர் மலைகளினூடே உள்ள தனது இருப்பிடத்திலிருந்து கொண்டே பிரெஞ்சு இராணுவத்[illegible]

(5-ம் கலம் பார்க்க)

6 முதல் 14 வயதுவரை...

(மேல் கட்டத்தின் தொடர்ச்சி)

அளிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

14 வயது வரையுள்ள பிள்ளைகளுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும் என்ற அரசியல் சட்டத்தின் ஆணையின் ஒருபகுதி நிறைவேற்றப்படுவதாக ம. பி. சர்க்கார் அறிவிக்கிறார்கள்.

இப்படி இலவசமாகக் கல்வி அளிப்பதினால் சர்க்காருக்கு [illegible] 17 இலட்சம் வருமானம் இல்லாமற் போகும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

வெள்ளையரின் ஏகாதிபத்திய வெறி

விடுதலைக் கோரும் ஆப்பிரிக்கரில் 1,071 பேருக்கு தூக்குத் தண்டனை

லண்டன், ஜூன் 4—

"1952 அக்டோபர் திங்களில் மாவ் மாவ் கிளர்ச்சிக்காரர்களை எதிர்த்து நடவடிக்கை ஆரம்பித்ததிலிருந்து கினியாவில், இது வரை 1,071 பேர் தூக்கிலிடப் பட்டனர்,"

என்று, காலனி விவகார அமைச்சர் ஜான்ஹோர் கூறியிருக்கிறார்.

இவர்களில் 853 பேர் கொலை குற்றத்திற்காகவும், 432 பேர் சட்ட விரோதமாக துப்பாக்கிகள் வைத்திருந்ததாகவும், 54 பேர் சட்டவிரோதமான 'ஆணை'களை செய்துவைத்ததற்காகவும், 8 பேர் பலாத்காரத்துக்கு ஆதரவளித்ததற்காகவும், 2 பேர் கிளர்ச்சிக்காரர்களுக்கு 'சப்ளை'கள் தரும்படி கேட்டதற்காகவும் தூக்கிலிடப்பட்டனர் எனவும் அவர் அறிவித்தாராம்.

'எந்த விலை தந்தேனும் நீதியை நிலைநாட்டியே தீருவோம்'

மராட்டியத் தலைவர்கள் சூளுரை

பூனா, ஜூன் 5—

என்னவிலை கொடுத்தேனும் நீதியை நிலைநாட்டுவது—பம்பாய் மராட்டியத்துடன் இணையச் செய்வது—என்று, மராட்டிய தலைவர்கள் சூளுரைத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இங்கு கூடிப்பேசிய அவர்கள், தங்களின் நியாயமான உரிமைக்காக இடைவிடாது தொடர்ந்து போராட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்திருக்கிறார்களாம்.

என். வி காட்கில், நீண்டகாலப் போர்த் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டுமென்று விரும்புவதாகவும், மராட்டியர் நீதி பெறுவதற்காகத் தரவேண்டிய விலை மிக அதிகமாக இருக்கக்கூடும் என்று கருதுவதாகவும் தெரிகிறது.

சம்புக்த மராட்டிய சமிதியைச் சேர்ந்தவர்களும், உரிமைப்போர் தொடர்ந்து நடைபெறவேண்டுமென்றே எண்ணுவதாகவும் கூறப்படுகிறது

(4-ம் கலத்தின் தொடர்ச்சி)

[illegible]திற்கு எதிராகப் போராடிக்கொண்டிருப்பதாகவும், அவர் அங்கே [illegible] 'சுதந்திரக் குடியரசை' நிர்மாணிக்க முயற்சித்து வருவதாயும், அந்தக் குடியரசுக்குத் தானே [illegible] என்று பிரகடனப்படுத்தியுள்ளதாயும் பிரெஞ்சுத் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

மே திங்களின் கடைசி [illegible] வாரங்களில் மட்டும் [illegible] தம் 2,500 அல்ஜீரியர்களின் [illegible] தாகவும், 400 பேர் [illegible] செய்யப்பட்ட[illegible] கூறும் [illegible] விரிவுத் [illegible]

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—6—'56 புதன்

சிங்கப்பூர் சிக்கல்!

'சிங்கப்பூருக்கு முழு விடுதலை பெற்றுத் தர முடியாது போனால், நான் பதவியிலிருந்து விலகிவிடுவேன்' என்று சூளுரைத்து விட்டுத்தான், முதன மந்திரி டேவிட் மார்ஷல் பதவி ஏற்று, சுதந்திரத்திற்காக முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்.

இப்போது அவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது. லண்டனில் நடைபெற்ற சுதந்திரத்திற்கான முயற்சிகள் முறிந்துவிட்டதின் விளைவு இது!

லண்டனில் பேச்சுவார்த்தைகள் துவங்குவதற்கு முன்பாக, 'ஆதிக்கத்தை, அதிகாரத்தை விட்டுவிட வேண்டுமே என்பதற்காக சிங்கப்பூரில் பிரிட்டிஷ் ஆட்சி தொடர்ந்து நடைபெறும் என்று எவரும் அஞ்சத் தேவை இல்லை' என்றும், 'மலாயாவில், தேசீய உணர்வுகள் திருப்தி செய்யப்பட்டிருக்கின்றன; அதேபோல சிங்கப்பூரின் ஆழ்ந்த தேசீய உணர்வுகளும் மதிக்கப்படாமல் போய்விடமாட்டாது' என்றும் லண்டன் 'டைம்ஸ்' இதழ் எழுதியிருந்தது.

ஆனால், இந்த நம்பிக்கையூட்டும் வாசகங்கள் பொருளற்றுப்போய்விட்டன. லண்டன் பேச்சுவார்த்தைகளில், சிங்கப்பூருக்குச் சுதந்திரம் வழங்க பிரிட்டன் மறுத்துவிட்டது. இந்தப் பேச்சுவார்த்தைகள் முறிந்துபோனதற்கான காரணங்களைப் பிரிட்டிஷார் விளக்க முயன்று தோல்வியுற்றிருக்கின்றனர். அவர்கள் கூறும் காரணங்கள், காலத்தோடு ஒட்டியனவாக அமையவில்லை.

சிங்கப்பூர், சுதந்திரம பெறுவதற்குரிய பரிபக்குவத்தை இன்னும் அடையவில்லை என்று லண்டன 'டைமஸ்' இதழ் கூறுகிற காரணமோ, அல்லது, பிரிட்டிஷ் காலனி மந்திரி கூறுகிற—'சைப்ரசும், சிங்கப்பூரும, இராணுவ நோக்கிலிருந்து பார்க்குமபோது, இங்கிலாந்திற்கு தவிர்க்க முடியாத நிலப் பரப்புக்களாகும்' என்ற காரணமோ, விடுதலை விரும்பிகளால் ஏற்றுக்கொள்ளததக்கது அல்ல என்பதுமன்றி, அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களின் வெந்த மனதை கோல் கொண்டு கிளறுவதுபோன்றதும் ஆகும்.

சிங்கப்பூருக்கு முழு சுதந்திரம் வழங்குவதின் மூலம, அதன் உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுப் படையெடுப்பைத் தடுப்பதற்கான தற்காப்பு, இவற்றிற்கான ஆற்றலை அது இழந்துவிடும் என்று பிரிட்டிஷார் சார்பில் வாதிடப்படுவது, விந்தைக்குரியதாயிருக்கிறது.

முழு சுதந்திரம் பெற்ற பின்பும, 'காமன்வெல்த்' தொடர்பை வைத்துக்கொள்ள முதன் மந்திரி டேவிட் மார்ஷல் சமமதித்திருக்கிறார். அவ்வாறிருக்க, சிங்கப்பூர் பாதுகாப்பிறகாக பிரிட்டன் கவலைப்படுவது உண்மையானால், முழு சுதந்திரம் வழங்கிய பின்னும் அந்த அக்கறையைக் காட்ட முடியாதா?

மேற்கத்திய வல்லரசுக் கோஷ்டியில், தான் ஒரு பிரதான அங்கத்தினன் என்ற முறையில், 'மற்றுமோர் உலகப் பெரும்போர் ஏற்பட்டால்....!' என்ற தீய எண்ணத்திற்கு உள்ளத்தில் இடம் தந்திருக்கும் நிலையில், 'இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த சைப்ரசையும், சிங்கப்பூரையும், விடமாட்டோம்' என்றுபிரிட்டன் பேசுவது, அதன், ஓரளவு பெருமைக்குரிய காலனிக் கொள்கைப் பாரம்பரியத்திற்கு இழுக்கைத் தேடித்தரத் தக்கது என்றே சிங்கப்பூர் மக்கள் கருதுவர்.

அடிமை கொண்டிருக்கிற ஏகாதிபத்தியத்தின் இராணுவத் தேவைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்கள் தீனியாக வேண்டும என்பது, இந்த இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் எந்த நியாயவான்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல!

'காலனிகளுக்குச் சுதந்திரம் வழங்க வேண்டும் என்ற கொள்கை எங்களுக்கு ஏற்புடையதே; ஆனால், அந்தச் சுதந்திரம் எப்போது வழங்கப்படுவது? ஒரு காலனி சுதந்திரம் பெறுவதற்கு தகுதி பெற்றுவிட்டதா? என்பதை நிர்ணயிப்பதில்தான் தகராறு கிளம்புகிறது,' என்று, பிரிட்டிஷாரின் காலனி கொள்கையை விளக்க முயற்சிப்பவர்கள், சிரமப்பட்டு வாதிடுகிறுர்கள்.

'ஒரு காலனி சுதந்திரம் பெறத் தகுதி படைத்ததுதானு என்று நாங்கள் ஆராய்கிறோம,' என்று கூறுவதே, 'ஆளுகிறோம்' என்ற நிலை தரும ஆணவத்தின் விளைவுதான்!

'ஒரு நாடு, அந்த நாட்டுக்குரிய மக்களால் மட்டுமே ஆளப்பட வேண்டும்; அதற்குரிய தகுதியை அவர்கள் பெற்றிருக்கிறுர்களா இல்லையா என்று 'பரிசோதனை' செய்வதற்கு மாற்றுர் எவருக்கும உரிமை இருக்கமுடியாது — உரிமை இருக்ககூடாது,' என்பது; மக்களினத்தின் புதிய மலர்ச்சியிலிருந்து ஆவேசத்தோடு வெளிப்படும் விடுதலை வேட்கையாகும்.

இந்த வேட்கையை, தங்களது போராற்றலால் அழித்துவிட நினைப்பவர்கள் விவேகமற்றவர்கள் என்றே கருதப்படுவர். வரலாறு அவர்களுக்காக அனுதாபப்படும்.

சிங்கப்பூர் முதன்மந்திரி பதவியிலிருந்து விலகிக்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் மார்ஷல், அண்மையில் கூறியிருப்பதுபோல, பிரிட்டிஷார் பாதாளத்தில் விழுமுன்னர், ஒரு பத்து நிமிடம சிந்திக்கட்டும்—'என்ன கேடு வந்துவிடும், சிங்கப்பூர் விடுதலை பெறுவதால்தான்' என்பதை!

அந்தச் சிந்தனைதரும் முடிவைப் பொறுத்துத்தான், சிங்கப்பூர் சிக்கல் தீருவதும் இருக்கிறது.

5 கோடி பொன்நிற மீன்கள் பலி!

டோக்கியோ, ஜுன் 4—

பிகினியில் நடைபெற்ற நீரவளிக் குண்டு பரிசோதனையின் விளைவாக சுமார் 5 கோடி பொன்நிற மீன்கள் இறந்துபட்டன என்று தெரிய வருகிறது.

பிரபல பொன் நிற மீன் உற்பத்திப் பண்ணையான நாரா எனும் இடத்தில் இந்தப் பேரழிவு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த மீன்கள் உற்பத்தியாகும் குளங்களின்மீது, விசேடமான நைலான் துணிகள் விரிக்கப்பட்டிருந்தனவாம்—இந்த அணுசக்தி மழை பெய்து, குளத்தை நாசமாக்கி விடாமலிருக்க! என்றாலும், இந்த ஏற்பாடு பலன் தராது போய் விட்டது என்றும் கூறப்படுகிறது.

இந்த மீன் உற்பத்தி ஒரு பிரபலமான தொழிலாக இருந்து வருகிறது என்பதால் இந்த பேராபத்தைக் கண்டு கலங்கிப் போய்உள்ள வர்த்தகர்கள், அதிகாரிகள் ஆகியோர் இதுபற்றி விசாரித்துக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

கால்நடைச் செல்வம்

இந்தியாவின் எண்ணிக்கை

புதுடில்லி, ஜுன் 1—

இந்தியாவில் 1952 — 53-ம் ஆண்டில் மொத்தம் 15,50,99,000 கால்நடைகள் இருந்தனவென்றும், அவற்றில் பசுக்கள் 4 98 48 000; எருமைகள் 2,18,42,000 என்றும், ஆண்டொன்றுக்கு மொத்தம் சுமார் 51,00,00,000 மணங்கு பால் உற்பத்தியாயிற்று என்றும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

இந்தியாவில் 1951-ம் ஆண்டில் 1,17 27,000 மணங்கு நெய்யும், 20,35,000 மணங்கு வெண்ணெயும், சுமார் 1,40,72,000 முட்டைகளும் உற்பத்தியாயினவாம.

1951-ம் ஆண்டில் 3 17,79,538 மர ஏர்களும், 9,31,110 இரும்பு ஏர்களும், 98 63,111 வண்டிகளும உபயோகத்தில் இருந்திருக்கிறதாம்.

21,228 மின்சாரத்தால் இயங்கும் கரும்பு ஆலைகளும், 5,19,509 மாடு இழுக்கும் கரும்பு ஆலைகளும் இருந்தனவென்றும், விவசாயத் தொழிலுக்கென 95,140 எண்ணெய் எஞ்சின்களும், 29,834 மின்சாரக் குழாய்களும் உபயோகத்தில் இருந்துள்ளனவென்றும், விவசாயத்திற்கென மொத்தம் 8,354 இயந்திர ஏர்கள் (டிராக்டர்) பயன்படுத்தப்பட்டிருக்கின்றன வென்றும் தகவல் தரப்பட்டுள்ளது.

பூமியை நோக்கி 5-இலட்சம் மைல் வேகத்தில் பாய்ந்துவரும் சுக்கிர கிரகம்

கொலம்பஸ், (ஓகியோ) ஜுன் 5—

பூமியின அளவும் அதறகு வெகு சமீபதநில் இருப்பதுமான சுக்கிரன் எனற கிரகம், இபபோது பூமியை நோக்கி தினம ஒன்றுக்கு 5-இலடசம மைல வேகததில்வந்து கொண்டிருக்கிறதாம்! அதுவேதான், மேற்கு வானில் மிகப்பிரகாசமாகக் காட்சியளிக்கிறதாம்!

இம்மாதம் 22-ந்தேதியன்று, அக்கிரகம் பூமிக்கு வெகு சமீபத்தில—2,70,00,0 மைல் தூரத்தில் வந்துவிட்டு, மீண்டும் பின்னடையத் தொடங்குமாம்!

இது பற்றி தெரிவித்த ஓகியோ பல்கலைக் கழக வானிலை ஆராய்ச்சி நிலைய டைரக்டர், சுக்கிரன் கிரகத்திலிருந்து 'ரேடியோ அலை' சமிக்ஞைகள் அடிக்கடி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். பூமியில் சூறாவளி வீசுகையில், ரேடியோவிலிருந்து கிளம்பும் ஒருவித சப்தம்போல் இந்தச் சப்தமும் கேட்கிறதாம்! சுக்கிரனிலும் இதுபோன்ற சூறாவளி இருக்கக் கூடுமென அவர் கருதுகிறாராம்.

புதிய 'ரேடியோ அலை' சமிக்ஞைகள் சுக்கிரனைச் சுற்றியுள்ள வாயுமண்டலத்தின் தன்மைகள் பற்றி அறிவதற்குப் பெரிதும் உதவுமாம்!

'பிரிட்டிஷ் முறைச் சட்டங்கள் இந்நாட்டிற்கு பொருத்தமானதல்ல'

சாதாரண மக்களுக்கும் புரியும் வண்ணம் சட்டங்கள் எளியனவாக இருத்தல் வேண்டும்

நீதிபதி கே. இராமசாமி (கவுண்டர்) கருத்து

ஈரோடு, ஜுன் 4—

"இப்போதுள்ள சட்டங்களின் தெளிவற்ற தன்மையையும், புரிந்துகொள்ள இயலாதிருக்கும் கடுமையையும் கண்டித்து கருத்து வழங்கியிருக்கிறார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியான கே. இராமசாமி (கவுண்டர்) அவர்கள்.

"ஆங்கில முறையிலிருந்து காப்பியடிக்கப்பட்டவை என்று கூறப்படாவிட்டாலும், அதிலிருந்து கடன் வாங்கப்பட்டதுதான், நமது சட்டங்களும் நடைமுறைகளும்! இவை, நம்முடைய தினசரி வாழ்க்கையிலிருந்து வளர்ந்தவை அல்ல!

"ஆங்கில சட்ட, நீதி பரிபாலன முறை எத்தனை சிறப்புடையதாக இருப்பினும்கூட, அது நமக்கு உகந்ததாக இருக்கவில்லை; காரணம், நம்முடைய சமூக நிலைகளுக்கு ஒப்ப இன்றி, அப்படியே ஆங்கில முறை இங்கு புகுத்தப்பட்டிருப்பதுதான்!

"தேவைப்படுவது எல்லாம், ஒவ்வொரு துறைக்கும் எளிய விதிகள் அடங்கிய சட்டங்கள்தான்; அவை, ஒரு வழக்கறிஞரின் துணையின்றி, சாதாரண மனிதர்களாலும் புரிந்துகொள்ளத்தக்கனவாக இருக்க வேண்டும்.

"இந்தியாவில் உள்ள மக்கள், அறியாமையிலும், ஏழ்மையிலும் உழல்பவர்களாக இருக்கிறார்கள். இந்தியா பொருளாதார, தொழில்துறைகளில் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் உள்ள இந்தியாவிற்கு, மிக உயர்வாக வளர்ந்துள்ள ஒரு சமூகத்தின் சட்டங்களைப் புகுத்துவது, முறையானதாக—நன்மை பயக்கக்கூடியதாக இருக்கமுடியாது

"வழக்குத் தொடரும் ஒரு குடிமகனின் 'இல்ல'த்திலேயே நீதி வழங்கப்படவேண்டும். வழக்குத் தொடருவோர் நீதி பெறுவதற்காக, நெடுந்தொலைவு பிரயாணம் செய்யவேண்டிய நிலை இருக்கக்கூடாது. இப்படிப் பிரயாணம் செய்வதினுல், வழக்குத் தொடுப்போர், பெரும் பணத்தை விரயம் செய்ய நேரிட்டு, அழிந்துபட வேண்டியுள்ளது.

"எனவேதான், இடத்திற்கு இடம் தேடிச் சென்று வழக்குகளை விசாரித்து நீதி வழங்கும் நீதி மன்றங்கள் அமைக்கவேண்டும் எனறு நான் வாதாடி வருகிறேன் இததகு நீதி மன்றஙகள் அமைவதன் மூலம் வழக்குத் தொடருவோரும, சாட்சிகளும பெருந்தொலைவு நடக்கவேண்டியிராது,"

என்று நீதிபதி இராமசாமி (கவுண்டர்) அவர்கள், ஈரோடு நகரில் புதிய நீதிமன்றம் ஒன்றைத துவககி வைததுப் பேசுகையில் குறிபபிட்டிருக்கிறார்.

155 வயதான ரஷ்ய விவசாயி!

சோவியத் நாட்டில், ஜியார்ஜியாவில் வசிக்கும் முதுகிழவரான ஒரு விவசாயியை ரஷ்ய விஞ்ஞானிகள் சென்று பார்த்தனராம!

எகார் கொரியேவ் என்ற அந்த விவசாயப் பெருமகனுக்கு இவ்வாண்டில் 155 வயது நிரம்பப் பெறுகிறதாம்.

இன்னும் அவர் உடல் நலமிக்கவராகவும, சில வேளைகளில் விவசாயக் கூட்டுப் பண்ணையில் பணியாற்றுபவராகவும் இருக்கிறாரெனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், அந்த விஞ்ஞானிகள், 147 வயதுள்ள தோட்டக்காரர் ஒருவரையும் சந்தித்தார்களாம்!

90 வயதுக்கு மேற்பட்ட சுமார் 10,000 பேர் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைபாடுகள் மலிந்த சட்டங்கள்

நீதிபதி ஏ.எஸ்.பி. அய்யர் கருத்து

ஈரோடு, ஜுன் 4—

இப்போதுள்ள சட்டங்களின் படி, சமூக ஒழுக்கத்தைக் கெடுக்கும ஆண் ஒருவனைத் தண்டிக்க முடியும்—சிறைச் சாலைக்கு அனுப்ப முடியும்; ஆனால், எந்த ஒரு பெண்ணின் 'ஒத்துழைப்பு' இன்றி இந்தக் குற்றத்தை ஒரு ஆண் மகன் செய்ய முடியாதோ, அந்தப் பெண்ணுக்குத் தண்டனை தரமுடியாது.

ஒரு ஏழைக் கணவனிடமிருந்து பணக்கார மனைவி 'ஜீவனும்சம்' கோரமுடியும்; ஆனால், ஒரு ஏழைக் கணவன், பணக்காரியான மனைவியிடமிருந்துகூட ஜீவனும்சம் கோர முடியாது.

பட்டினியால் செத்துப்போன ஒருவனைப் பற்றி விசாரணை நடத்துவதற்கும், அவன் பிரேதத்தைப் பரிசோதிப்பதற்கும் குறைந்தது 15 ரூபாய் செலவிடுகிறுர்கள்; ஆனுல், அவன் உயிரோடு இருக்கும்போது, அவனைச் சாகாமல் காப்பாற்ற ஒருவேளை உணவுக்காக எட்டு அணுகூட செலவிட முடியாது.

சென்னையில் உள்ள ஒரு முஸ்லீம் ஒரே சமயத்தில் நான்கு பெண்களை மணந்துகொள்ள முடியும். ஆனுல் ஒரு இந்துவோ, கிறிஸ்தவரோ அப்படிச் செய்தால், சிறைக்கு அனுப்பப்படுவார்கள்.

என்று, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்

ஈரோடு வழக்கறிஞர் மன்றத்தின் 100-வது ஆண்டு விழாவில் பேசிய அவர், மேலும், 'எந்த ஒரு துறையிலும் எநத ஒரு நாடும முழுமையான பூரணத்துவம் பெறறச் சட்டங்களைக்கொண்டிருப்பதாகப் பெருமையடித்துக்கொள்ள முடியாது,' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தி பற்றி மீண்டும் நேரு

"இந்தி அகில இந்திய அரசு மொழி—ஆட்சி மொழிதான்; இந்தியாவில இந்திமட்டுமல்ல, ஒரே தேசிய மொழி! இந்தியாவில், சம அந்தஸ்து உடைய(!) 14 தேசிய மொழிகள் இருககின்றன,"

என்று பண்டித நேரு, இந்தி பற்றி சில இடங்களில் நிலவும் தவறுன கருததுக்களைத் திருத்துவதற்காக எனறு கூறி, பம்பாய் நகரில் நடைபெற்ற காஙகிரஸ் பொதுக் குழுக் கூட்டத்தின்போது குறிப்பிட்டாராம்.

"இந்தியாவில் உருது மொழி சரியான—நியாயமானதோர் இடத்தைப் பெறவில்லை என்பதும் உண்மைதான; குறிப்பாக, ஏராளமான உருது மொழி பேசும் மக்களைக்கொண்ட உத்தரபிரதேசம்—டில்லி மாநிலங்களிலும் இந்த நிலை இருப்பதும் உண்மைதான்," என்றும் அவர் கூறினாராம்.

அடுத்த ஆண்டில் அமுலுக்குவரும் ஐந்து புதிய நாணயங்கள்

பழைய—புதிய நாணயங்களின் விகிதத் தொடர்பு இந்தியில்தான் குறிக்கப்படுமாம்!

1957 ஏப்ரல் 12-ந்தேதி முதல் இந்தியாவில் புதிய தசாம்ச நாணயங்களை அமுலுக்குக் கொண்டுவர இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். அதன்படி ஏழுவித நாணயங்கள் பழக்கத்துக்குவரும். அவைகளில் மிகக்குறைந்த நாணயம் நயா பைசா; உச்ச மதிப்பு நாணயம் ரூபாய். ஏழு நாணயங்களும் வருமாறு;

1 நயா பைசா.
2 நயா பைசா.
5 நயா பைசா.
10 நயா பைசா.
25 நயா பைசா.
50 நயா பைசா.
100 நயா பைசா.

100 'நயா பைசாக்கள்' ஒரு ரூபாயாகும்.

ரூபாய் நாணயமானது, பெயரிலும் மதிப்பிலும் இப்போது உள்ளதுபோலவே இருக்கும்; இதர நாணயங்கள் எல்லாம் 'நயா பைசா' கணக்கில் குறிப்பிடப்படும்.

அமுலுக்கு வரும் காலம்

ஆரம்பத்தில் ஒரு நயா பைசா; 2 நயா பைசா; 5 நயா பைசா; 10 நயா பைசா நாணயங்கள்தான் 1957 ஏப்ரல் 1-ந் தேதி முதல் புழக்கத்துக்குக் கொண்டுவரப்படும்.

25, 50 நயாபைசாக்களும், புதிய ரூபாயும் பின்னர் அமுலுக்கு வரும். அதுவரையில் இப்போதுள்ள கால் ரூபாய், அரை ரூபாய், முழு ரூபாய் நாணயங்கள் புழக்கத்தில இருக்கும்; ஏனென்றால் அவைகளின் மதிப்பில் மாறுதல் இல்லை ஆனால், சர்க்கார் கணக்குகளில 1957 ஏப்ரல் 1-ந் தேதி முதல் ரூபாய், 'நயா பைசா' முறைப்படி கணக்கு எழுதப்படும்

இந்தியில்தான் எழுதப்படுமாம்!

மக்களுக்கு ரூபாய்க்கும்—'நயா பைசா'வுக்கும் உள்ள விகித தொடர்பு நன்ருகத் தெரியும் பொருட்டு, ஒவ்வொரு நாணயத்தின் மேலும், ரூபாயில அது எவ்வளவு பங்கு எனபது (இந்தியில்) எழுதப்பட்டிருக்கும். உதாரணமாக ஒரு நயா பைசா நாணயத்தில், (ரூபாயில் நூற்றில் ஒரு பங்கு) என்று எழுதப்பட்டிருக்கும.

குறித்துக் கொள்ளுங்கள்

'நயா பைசா' வெண்கலத்தில் செய்யப்பட்டிருக்கும்; 2, 5, 10 நயா பைசாககள் செம்பு - நிக்கல கலவையாக இருக்கும 25 நயா பைசா, 50 நயா பைசா, ரூபாய் ஆகிய நாணயஙகள் அப்பட்டமான நிககலில தயாரிக்கப்பட்டிருக்கும்

புதிய நாணயஙகள் எலலாவற்றின் முன்புறத்திலும், அசோகத தூண்—சிங்கச்சின்னம பொறிககப் பட்டிருக்கும் அதோடு கூட, 'பாரத' என்று இந்தியிலும், 'இந்தியா' என்று ஆஙகிலததிலும வாசகம் பொறிக்கபபட்டிருக்கும எல்லாப் புதிய நாணயங்களின் பினபுறத்திலும அவை தயாரான வருடம், அவைகளின் மதிப்பு (எத்தனை நயா பைசா' என்பது) ஆகியவை சர்வதேச இலக்க வரிசைப்படி (1; 2; 3;......) எழுதப் பட்டிருககும்.

'நயா பைசா' ரூபாயில் நூறில் ஒரு பங்கானபடியால், இப்போதுள்ள பைசாவைவிட அது மதிப்பில குறைந்ததாக இருக்கும்; இப்போதுள்ள பைசா ரூபாயில் 1/64 பங்கு

புதிய அடிப்படை நாணயத்தை 'நயா பைசா' என்று குறிப்பிடுவது, மாறுதல் நடககிற இடைக்காலத் குழப்பம் வராமலிருப்பதற்காகத தான்; அந்த இடைக்காலத்தில் பழைய பைசாவும, நயா பைசாவும் புழக்கத்திலிருக்கும். இந்த இடைக் காலம் சுமார் மூன்று வருடமாக இருக்கும்; அதற்குள் புதிய நாணயங்கள் நாட்டில் முழுக்கப் புழக்கத்துக்கு வந்துவிடும். இடைக் காலம தீர்ந்தபின், தசாம்ச நாணயம் மாத்திரமே புழக்கத்திலிருக்கும்போது, 'நயா' என்கிற அடைமொழி கைவிடப்படலாம்.

புதிய திட்டப்படி........!

25 நயா பைசா 4 அணாவுக்குசமம்
50 „ 8 „
100 „ 1 ரூபாய்க்கு சமம்

இப்போதுள்ள 2 அணா, 1 அணா அரை அணா, காலணா நாணயங்களுக்கு நேர் சமமான புதிய நாணயங்கள் இல்லை; ஆனால், அவைகளுக்குப் பதிலாக 10 நயா பைசா; 5 நயா பைசா; 2 நயா பைசா; 1 நயா பையா நாணயங்கள் இருக்கும் இப்போதுள்ள நாணயங்களுக்கும் புதிய நாணயங்களுக்கும் உளள பரிவர்த்தனை விகித விவரம் தயாரிக்கப்பட்டுவருகிறது.

ஆவடியில் தானியக் கிடங்குகள் அமைப்பு

75,000 டன் உணவுப் பொருள் சேமித்து வைக்கப்படுமாம்

சென்னை, ஜுன், 5—

ஆறு அல்லது எட்டு மாதக் காலத்திற்குள், சென்னையை அடுத்துள்ள ஆவடியில், சுமார் 75 000 டன் தானியங்களைச் சேமித்து வைக்கக்கூடிய அளவுக்கு, 25 கிடங்குகளை நவீன முறையில் நிர்மாணிப்பதற்கு இந்திய சர்க்கார் உத்தேசித்துள்ளனராம்.

நாட்டின் முக்கிய இடங்களில் 20 இலட்சம் தானியத்தைச் சேமித்து வைப்பது மத்திய சர்க்காரின் திட்டமாகும்.

புது கிராமங்களுக்கு மின்சாரம் பரவலாகும்

புதுவை மாநிலத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும், அநேகமாக இவ்வாண்டு முடிவுக்குள் மின்சார வசதியைப் பரவலாக்குவது சாத்தியமே என்று கூறப்பட்டுள்ளது.

மேற்கு நாடுகளை மிரட்டிப் பார்க்கிறார்!

கோவாபிரச்சினையில் கருத்து அறிவிக்காதிருப்பதேன்?

"கோவா பிரச்சினை, ஒரு நாட்டைப் பற்றிய விவகாரமல்ல; அது, காலனி ஆதிக்கப் பிரச்சினையாகும்; ஆகவே, இப்பிரச்சினையில், மேலை நாடுகள் ஏன் நடுநிலைமை வகிக்க வேண்டும்? காலனி ஆதிக்கப் பிரச்சினையில் அவர்கள் நடுநிலைமை வகிப்பதென்றால்—கோவா சம்பந்தமாக யாருடைய நிலைமையை ஆதரிக்கிருர்களென்பதைத் தெளிவாகக் கூற மறுத்தால், அவர்கள் எதையோ மறைத்து வைக்கப்பார்ப்பதாகவே அர்த்தமாகும்,"

என்று,பிரதமர்நேரு கூறியுள்ளார்

"'நாட்டோ' ஒப்பந்த நாடுகளில் போர்ச்சுகல் சேர்ந்திருக்கிறது; ஒரு போரில் அந்நாடுகள் ஈடுபட்டால், கோவாவை ஒரு தளமாக ஆக்ககூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன; அவ்வாருன நிலைமை ஏற்படுமானுல், யுத்தம், இந்தியாவின் வாயிற்படியையே நெருங்கிவிடும்.

போர்ச்சுகல், கோவாவில் 500 ஆண்டுக்காலம் ஆட்சிபுரிந்திருப்பதால், அங்கு நீடித்திருக்க அதற்கு உரிமை உண்டென்று கூறுவது, தர்க்க நியாயத்திற்குப் பொருத்தமானதல்ல; அது, குதர்க்கவாதமேயாகும். உலகத்தில் எந்த நாட்டிலும் ஒரு கொடுங்கோல் ஆட்சியை நீடித்துவைக்க அந்த விவாதத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

சர்வதேச ஆதரவை கோவா இழந்துவிட்டால், போர்ச்சுக்கல் பிரதமர் டாக்டர் சலாசரால் ஒரு ஒரு நிமிடங்கூட கோவாவில் தங்க இயலாது; இந்திய சமஸ்தானுதிபதிகளுக்கு பிரிட்டிஷார் 'உரம்' தந்துவந்தனர்; அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியதும் சமஸ்தானுதிபதிகளுக்கு ஏற்பட்ட நிலைமையே டாக்டர்சலாசருக்கும் ஏற்படும்," என்றும், பண்டிதர் கூறியிருக்கிருராம்.

உதகை நகர சபையில் கலப்புத் தடைச் சட்டம்

திருத்தப் பிரரேபணை நிறைவேறியது

23—5—56ல், நடைபெற்ற உதகை நகரசபை கூட்டத்தில் தோழர் கே. முகம்மது காசிம் என்ற உறுப்பினரால் கொண்டுவரப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

பொதுமக்களின் சுகாதாரத்திற்கென்று கொண்டுவரப்பட்ட கலப்புத் தடைச் சட்டம் மிகக் கடுமையாயிருப்பதால் அதிகாரிகள் அதனை துஷ்பிரயோகம் செய்ய ஏதுவாகவுள்ளதென்றும், சட்டத்தை நல்லமுறையில் அமுல் நடத்தி கலப்பு செய்தவர்களைத் தண்டிக்க வசதியாக இருக்கும் பொருட்டு கலப்புச் சட்டத்தில் கீழ்காணும் விதிகளையும் சேர்த்து வெளியிடும்படி தீர்மானம் கோருகிறது:—

1. சுகாதார இலாகாவில் 'சேனட்டரி இன்ஸ்பெக்டர்' போன்றவர்கள் கலப்புத் தடைச் சட்டத்தின்கீழ் 'சாம்பிள்' எடுத்து வருவதை நீக்கி, நகரசபை அல்லது மாவட்டக் கழக சுகாதார அதிகாரிகளே நேரில் சாம்பிள் எடுக்க வேண்டும்;

2. சாம்பிள் எடுத்த பிறகு சீசாக்களில் துணி, அல்லது காகிதம் கொண்டு எழுதும் மறைத்து 'சீல்' வைப்பதில் சுகாதார அதிகாரியின் முத்திரையும், சாம்பிள் கொடுத்த நபரின் முத்திரையும் இருககவேண்டும்.

3. சாம்பிள் எடுத்து முடிந்து பின் குறிப்பிட்ட நேரத்தில் சுகாதார அதிகாரியும், சாம்பிள் கொடுத்த நபரும் இருவருமாக ஸ்தலமாஜிஸ்திரேட், அல்லது கலெக்டர், அல்லது தாசில்தார் போன்ற அதிகாரிகளிடம் அதனை ஒப்படைப்புச் செய்வது; அந்த அதிகாரியே அதனைப் பரிசோதனைக்கு அனுப்பிவைப்பது; முடிவு தெரிந்த பின் சுகாதார அதிகாரி நடவடிக்கை நடத்தவேண்டும்.

4. சாம்பிள்களின் முடிவு தெரிந்த சுகாதார அதிகாரி கோர்ட்டில் நடவடிக்கை நடத்தும் பொழுது பரிசோதனையில் சந்தேகப்பட்டு எதிரி தன் வசம் இருக்கும் சாம்பிளை மறு பரிசோதனைக்கு அனுப்பும்படி கோரினால், சாம்பிளை ஏற்கனவே பரிசோதித்த அதிகாரிக்கு அனுப்பாமல் அடுத்த மாகாணத்திலுள்ள பரிசோதனை அதிகாரிக்கு அனுப்பவேண்டும்;

5. உணவு விடுதிகளில் வைத்திருக்கும் உணவு பதார்த்தங்கள் தவிர உணவு பதார்த்தங்கள் தயாரிக்க வைக்கப்பட்டிருக்கும் பொருள்களை சாம்பிள் எடுக்கக் கூடாது.

தனிப்பட்டோரது சொத்தாக செல்வம் உள்ளவரையில்!

வருமானத்திற்கு எல்லை கூடாதாம்

பிரிட்டிஷ் நிபுணர் கருத்து

"தனிப்பட்டோரின் சொத்தாகச் செல்வம் உள்ளவரையில் வருமானத்திற்கு எல்லை விதிப்பதன் மூலம் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை குறைத்துவிட முடியாது; வருமானத்துக்கு வரம்பு கட்டும் கிளர்ச்சி காரணமாக, புதிதாக நிறுவப்பட்டுள்ள அரசாங்கத் தொழில் நிலையங்களில் நிர்வாகத் தலைமை அதிகாரிகளுக்குத் தரப்படும் ஊதிய விகிதங்கள் குறைக்கப்படுமானுல அது நாட்டிற்கு பெருந் தீமையையே விளைவிக்கும்"

என்று, பிரிட்டிஷ் நிதி நிபுணர் பேராசிரியர் கல்டார் என்பார் தெரிவித்துள்ளாராம்.

'1946 — 51 - ஆண்டுகளின் காலத்தில் வருமானத்தின்மீது வரி ஏற்கனவே $97\frac{1}{2}$ சதவிகிதத்தை அடைந்துவிட்டதெனவும், தீவிர மாறுதல் எதுமின்றி வரி நிர்ணயத்தை நூற்றுக்கு நூறு சதவிகிதமாக உயர்த்த முடியுமென்ருலும் அப்படிச் செய்வது சமூகத்தின் உற்சாக உணர்ச்சிகளை அழிக்கத்தான் உதவும்' என்றும் அவர் கூறுகிருராம்!

"வரி வரம்பை நூற்றுக்கு நூறு சதவிகிதமாக உயாததினுல் வறுமையின் கொடுமைகள் ஒழிக்கப்படமாட்டாது; ஏனென்ருல் முதலாளிகளைப் பொறுத்தவரை முதலீட்டிலிருந்து கிடைக்கும இலாபங்கள் இல்லாது போய்விடமாட்டாது; ஆனுல் அவை, 'வருமானம்' என்பதறகுப் பதில் வேறு உருவம் எடுததுக்கொள்ளும்.

"இந்தியாவல் இன்றுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் வேறுபாட்டைக் குறைக்க வேண்டுவது முற்றிலும் நியாயமே; அதற்கு வழி, வரி விதிப்பு முறையை விரிவுபடுத்துவதும, நிர்வாகத்தை ஒழுஙகு படுத்துவதும தானே ஒழிய, வருமானத்துக்கு எல்லை விதிப்பதல்ல," என்றும அவர் குறிப்பிட்டுள்ளாராம்.

"நிலவுடைமைக்கு வரம்பு கட்டுவது நியாயமாக இருக்கலாம்; ஆனுல், வருமானத்துக்கும—மூலதனததுக்கும் வரமபு கட்டுவதறகு அது உவமையல்ல," என்று அவா கருதுகிருராம்!

இந்தியாவிலுள்ள நிலங்கள் மிகச் சிறியனவாயிருப்பதால், குறிப்பிட்ட வரம்புக்கு மேல் ஒருவர் நிலம் வை திருப்பதால், பொருளாதாரத் துறையில் நாட்டிற்கு இலாபம் கிடையாதென்றும், அது உண்மையில் விவசாய மக்களைச் சுரண்டும் ஒரு முறைதான் என்றும், நிலத்தின் உற்பத்திச் சக்தியை அதிகப்படுத்துவதறகுப் பல சந்தர்ப்பங்களில் அது தடங்கலாக இருக்கிறதென்றும் அவர் கருதுகிருராம்! 'ஆனுல், வர்த்தகம் அல்லது தொழில முயற்சி மூலம் சம்பாதிக்கும் அதிக வருமானம் நாட்டின் வளர்சசிக்கு இடையூறு அல்ல,' என்கிருராம், அவா!

இந்தியாவில், 1955-ம் ஆண்டில் மொத்த சுமார் ரூ 11,52,000 பெறுமானமுள்ள சனல் ஆலை இயந்திரச் சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

பாதாளத்தில் விழுமுன் உண்மையை நோக்குமாறு எச்சரிக்கை

சிங்கப்பூர் சுதந்திரப் பேச்சுவார்த்தை முறிவு குறித்து டேவிட் மார்ஷல் கண்டனம்

சிங்கப்பூர், ஜுன் 4—

'சிங்கப்பூருக்கு சுதந்திரம் பெற்றுத் தருவேன்', என்ற உறுதிமொழியை நிறைவேற்ற முடியாது போகிறநிலை ஏற்படுவதால், முதன மந்திரி பதவியிலிருந்து விலகிவிட திட்டமிட்டிருக்கும் டேவிட் மார்ஷல், லண்டனில் நடைபெற்ற சுதந்திர பேசசு வார்த்தைகள்பற்றிக் குறிப்பிடுகையில் பிரிட்டிஷ் பிரதமரைச் சாடியிருக்கிருர்.

"காலனி இலாகாவின் 'இராசத்திற்குப் பிரதமா ஈடன் தாளம் போட்டார்" என்று அவர் குற்றம் சுமத்திப் பேசினுர்.

"காலனி இலாகாவுடன் நான் நடத்திய கடிதப் போக்குவரத்திலிருந்து தெரிவதெல்லாம், இரண்டு விவகாரங்கள்தான் தீர்ககப்படாதவையாக இருககின்றன.

'சிங்கப்பூருக்கு மலாயா கவர்னர் ஜெனரல ஒருவரை நியமிப்பது; காலனி இலாகாவிடமிருந்து அவரிடம் அதிகாரங்களை மாற்றுவது — என்பவைதான் அவை இரண்டும்!

"இந்த இரண்டும் உள்நாட்டுப் பாதுகாப்பையோ, வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து தப்புவதற்கான தற்காப்பையோ எப்படிப் பாதிக்கும என்று கேட்க விரும்புகிறேன்.

"மிகவும் ஆபத்தான கட்டத்தில் பிரிட்டிஷா தஙகளை ஈடுபடுத்திக கொண்டிருக்கிருர்கள், அவர்கள் அதல பாதாளத்தில் விழுமுன்பாக சிறிதுநேரம் உண்மையை உற்று நோககுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்றும் மாா்ஷல் குறிப்பிட்டிருக்கிருர்.

புல் வளம் பெருகத் திட்டமிடுகின்றனர்

சென்னை, ஜுன் 5—

கால்நடைகளுக்கான புல் பயிரிடுவதற்கு ஊக்கமளிக்கக் கீழ் பவானி ஆயககட்டில், நிலச்சுவான்தார்கள், தஙகளுக்குச் சொந்தமான நிலத்தில், 10 சதவிகித அளவில் புல் வகைகள் பயிரிடலாமென்றும், அப்படிச் செய்பவர்களுக்குத் தண்ணீர் தீர்வையைப் பாதியாகக் குறைக்கப்படுமென்றும் சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனராம்.

சென்னை—புரசை திருவள்ளுவர் கழகம்

மேற்படி கழகத்தின் 13-ம் ஆண்டு பேரவைக் கூட்டத்தில், தி. வீ. இராமச்சந்திரன்—தலைவர்; புலவர் சொக்கலிங்கம், ஆதி. தேவநாதன்—செயலாளர்கள்; அ. மு. கோட்டிலிங்கனுர்—பொருளாளர்; மற்றும் 10 பேர் கொண்ட செயற் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிதி மந்திரி தேஷ்முக் விலகுவார்?

பண்டிதர் எதேச்சாதிகாரத்தின் எதிரொலி!

பம்பாய் பற்றிய நேருவின் முடிவு, மத்திய நிதிஅமைச்சர் ஸி. டி. தேஷ்முக் அவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளதாம்! ஆகவே, அமைச்சர் பதவியிலிருந்து அவர் விலகுவது தவிர்க்க முடியாத ஒன்ரும்!

பிரதம மந்திரி வாக்குறுதிகள் பல அளித்துள்ளபோதிலும், [illegible] றிற்கான ஏற்பாடுகளைப் பொ[illegible] வரையில், நிதிமந்திரிக்குத் [illegible] ஏற்படவில்லையாம்!

மாநிலச் சீரமைப்பு ம[illegible] மக்கள் சபையின் இற[illegible] தலுக்காகப் பரிசீலனை[illegible] போது, நிதி அமைச்சர் தமது நிலைமையைத் தெளிவு[illegible] என்று தெரிய[illegible]

மகாராட்[illegible] [illegible] அவருக்குக் [illegible] தாம்! எனவே [illegible] தொகுதி, மக்களின் [illegible] திற்கு மதிப்பு கொடு[illegible] தவிர, நிதி மந்திரிக்கு [illegible] வழியே கிடையாது [illegible] தெரிகிறது.

ஒரு நாடு விடுதலை பெறுவதற்குரிய வழிகள் என்ன?

மாநில மாநாட்டில் அண்ணா விளக்கம்

'சுதந்திரம் பெறுவதற்கு வேட்டு, ஓட்டு, ஒட்டு முறைகளே நானறிந்தவை'

'அருளாளர்களால் விடுதலை பெற்ற நாடு இல்லை'

'ஆண்டவனால் விடுவிக்கப்பட்ட நாடுகளையும் நான் கண்டதில்லை'

'நாட்டை விடுவிக்க நம்மால் முடியாதென்றால் வேறு எவரால் முடியும்?'

" ஒரு நாடு விடுதலை பெறுவதற்குரிய வழிகள் என்ன ?
" அருளாளர்களால் நாடு விடுதலை பெறுமா ?
" ஆண்டவனால் விடுவிக்கப்பட்ட நாடுகள் ஏதேனும் உண்டா?
" தாமாகவே சுதந்திரம் பெற்ற பூமி எது ?
" உள்ள வழிகள் மூன்றுதானே? வேட்டுமுறை—ஓட்டுமுறை—ஒட்டுமுறை—ஆகியவைதானே?
" இவற்றில் வேட்டுமுறை நமக்குப் பயன்படுமா? இந்த இருபதாம் நூற்றாண்டிற்கு உகந்ததா?
" ஓட்டுமுறை எப்படி நமக்குப் பிரயோசனமற்றது?
" ஒட்டு முறைதவிர திராவிடத்தைமீட்க வேறுவழிதான் உண்டா?"

என்பன போன்ற கேள்விகளுக்கு அண்ணா அவர்கள் விளக்கம் தந்தார் மாநில மாநாட்டில் சிறப்புரை ஆற்றும்போது!

அவரது பேருரையின் ஓர் பகுதி நேற்று வெளிவந்தது ; இன்று மற்றோர் பகுதி இங்கு தரப்படுகிறது ; இன்னும் தொடர்ந்து வரும் :—

" ஓட்டளிப்பு முறை நடைபெறுவதற்கு முன்னால், 'தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் ஈடுபடுவதா, வேண்டாமா?'—என்பதைப் பற்றி நாமே இரண்டொருவர் பேசலாம் என்று நம்முடைய தோழர்கள் விரும்பினர். நான்தான் நண்பர்களுக்குச் சொன்னேன்—'நாம் அது குறித்து எதும் பேசத் தேவையில்லை; பேசினால், வாதத் திறமையால் மக்களை தவறான வழியில் அழைத்துச் சென்று விட்டார்கள்' என்று, பிற்காலத்தில் பலர் சொல்லக்கூடும்; ஆகையினால், 'மக்களே, அவர்களாகவே சிந்திக்க விட்டு விடுங்கள்' என்று நான் கூறினேன்.

" இன்னமும் எனக்கு வாக்குப் பெட்டிகள் எங்கே வைக்கப்பட்டன என்பது தெரியாது ; எப்படி எப்படி மக்கள் வாக்களித்தார்கள் என்பதும் எனக்குத்தெரியாது; ஆனால் மக்கள் அளித்திருக்கிற தீர்ப்பு, மகத்தானதோர் புதிய பொறுப்பை நமக்கு அளித்திருக்கிறது.

" இந்தப் புதிய பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமானால் நாம இன்று அடைந்திருக்கிற வளர்ச்சி மட்டும் போதுமானதல்ல.

" இந்த வளர்ச்சி மட்டும் போதுமானதல்ல என்பதைக் காட்டுவதற்குத்தான், 4,000 தோழர்கள், 'தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொள்ள வேண்டாம்' என வாக்களித்திருக்கிறார்கள். 'அவர்கள் எல்லாம் நமமவர்கள் அல்லர்' என்று நான் தள்ளிவிடத் தயாராக இல்லை. 'அவர்கள் நல்லவர் அல்லர்' என்றும் நான் சொல்ல மாட்டேன்; அவர்கள் மிகமிக நல்லவர்கள் ; ஆகையினால்தான் ; நமக்கு ஒரு ஆபத்தும் ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தினால், 'இப்போது வேண்டாம தேர்தலில் ஈடுபடுவது,' என்று கூறியிருக்கிறார்கள்.

" அவர்களுக்கும் நான் கூறுவேன் — 'தேர்தல் என்றால், வெற்றி என்ற சொல்லையும், பக்கத்திலேயே எழுத வேண்டும்' என்று எந்த அரசியல் அகராதியும் சொல்லவில்லை.

" தேர்தல் என்பது ஒரு ஜனநாயகக் கடமை ; எப்படி, 'ஒரு வயதுவந்த ஓர் பெண் பருவமடைந்து விட்டாள்' என்றால், 'அவர் மணவினைக்குத் தயாராக இருக்கிறாள்' என்பது எவ்வாறு உறுதிப்படுகின்றதோ அதைப்போல், தேர்தல் ஒரு கட்டத்தை அடைகிற நேரத்தில்தான் ஒரு இயக்கம்—ஒரு கட்சி, அரசியலில புதியதோர் கட்டத்தை அடைகின்றது என்று பொருள் ; அதைத்தான் நாம் அடைந்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு நமக்கோர் ஜனநாயகக் கடமை இருக்கின்றது.

" ஒவ்வொரு ஊரிலும் கூட்டம் போடுகிறோம்; ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு இழைக்கப்பட்ட அவலநிலைகளை எடுத்துக் கூறுகிறோம்—'பக்ரா—நங்கல் கால்வாய் பெரும் சமுத்திரத்தைப்போல் இருக்கிறது—மணிமுத்தாறு சின்னஞ்சிறு கால்வாய்போல் இருக்கிறது; ரூ. 2,300 கோடி செலவிட்டதில் நமக்கு ரூ. 100 கோடிகூட இல்லை; நண்பர்களே! தோழர்களே! நாட்டு மக்களே! இந்த அநியாயத்தைக் கேளுங்கள்'— என்று கூறுகிறோம்.

" பொதுமக்களாக—நம்முடைய கழகத்தில் ஈடுபாடு அதிகம் கொள்ளாதவர்களாக இருப்பவர்கள், கூட்டம் முடிந்தவுடன் என்ன பேசிக்கொள்கிறார்கள்? 'ஆமாம்; இவர்கள் இத்தனை தவறுகள் இருப்பதாகக் கூறுகிறார்கள் ; ஆட்சியில் இத்தனை குறைபாடுகள் இருப்பதாக எடுத்துக் காட்டுகிறார்கள் ; ஆனால் நம்மை என்ன செய்யச் சொல்லுகிறார்கள்? என்ன வழி நமக்கு காட்டுகிறார்கள்?'—என்று கேட்கிற நேரத்தில, மக்களுக்கு பதில் சொல்ல நம்மிடத்தில் எதுமில்லை.

" சைவர்களுக்காவது, புராணம் படிக்கிற நேரத்தில், இடையிடையே, 'அரகர பார்வதி பத்தநமா' என்று சொன்னால், 'நமசிவாய' என்று கூச்சலிடுகிறார்கள் ; அவர்களுடைய கடமை முடிந்துவிட்டதாகக் கூறுகிறார்கள்.

" நம்முடைய கூட்டத்தின் இறுதியில் நாம் என்ன பேசி முடிக்கிறோம்? அதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்; 'இதுடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்' என்று அடக்கமுடையவர்களும் 'இதோடு என் சொற்பொழிவை முடித்துக் கொள்ளுகிறேன்' என்று அதை மறந்தவர்களும கூறிவிட்டுமுடித்து விடுகிறார்கள் ; '.................. 'எனவே, மக்களே! இதைச் செய்யுங்கள்' என்று நாம் கூறுவதில்லை.

" ஆகையினால், 'இதைச் செய்யுங்கள்' என்று மக்களிடத்தில் சொல்லுவதற்கு, மூன்றே மூன்று முறைகளைத்தான் நான் உலகத்தில் பார்த்திருக்கிறேன்.

" அவற்றை நான் கொச்சைத் தமிழில் சொல்லுவேனானால் 'அதற்கு வேறு பதமில்லை' என்று அர்த்தமல்ல! கொச்சைத் தமிழில் சொன்னால்தான், நாட்டை ஆளுகிற இந்திய சர்க்காருக்கும் புரியும் என்பதாலே நான் அந்த கொச்சைத் தமிழைப் பயன்படுத்துகிறேன்.

" ஒன்று, வேட்டு முறை— பலாத்காரம் ; இன்னொன்று, ஓட்டு முறை — ஜனநாயகம்; மற்றொன்று, ஒட்டுமுறை —யாராவது, பலமானவர்களுடன் ஒட்டிக் கோள்வது!

" 'இந்த மூன்று முறைகள் தான்; ஒரு நாடு விடுதலை பெறுவதற்கு நான் கண்டறிந்த வழிகள்!

" அருளாளர்களால் விடுதலை பெற்ற நாடுகளைப்பற்றி நான் படித்தேனில்லை! ஆண்டவனால் விடுவிக்கப்பட்ட நாடுகளைப்பற்றி நான் கேட்டதில்லை! தாமாக விடுதலை பெற்றுவிட்ட நாடுகளை நான் கண்டதில்லை!

"ஒன்று—வேட்டு முறையினால் விடுதலை பெற்ற நாடுகளை நாம் பார்த்திருக்கிறோம் ; இந்தோ—சீனாவைப் பார்க்கிறோம்—ஹோசி-மின், காடுகளை எல்லாம் தன்னுடைய கூடாரங்களாக்கி, மலைகளை எல்லாம் தன்னுடைய பாசறைகளாக்கி, பண்புள்ளவர்களை எல்லாம் தனக்கு பாதுகாவலர்களாகத் தேடிக் கொண்டு, ஏர் பிடித்து உழுபவர்கள், அரிவாள் பிடித்து கதிரறுக்கும் உழவர்கள் ஆகியோர் கரத்தில் எல்லாம் துப்பாக்கியையும் வெடிகுண்டையும் தந்து, 'தாக்க வருவர்— ஒளிந்து கொள்; மேலே குண்டு வீசுவான்—பதுங்கிக் கொள்' என்று போர்முறைகளைக் கற்றுக் கொடுத்து, மறைந்திருந்து தாக்கி, பின்னர் எதிர்த்து நின்று தாக்குதல் நடத்தி, எதிரிகளை ஓட ஓட விரட்டி, இந்தோ—சீனாவிற்கு விடுதலை பெறுவதில் ஹோசி-மின் வெற்றி பெற்றார்.

" 'அண்ணா, உங்களுக்கு இது பிடிக்கவில்லையா?' என்று கேட்கிற ஆற்றல்மிக்க தம்பிமார்கள், ஏராளமாக என்னிடத்தில் இருக்கிறார்கள், நான் அறிகிறேன்! மகிழ்கிறேன்! பெருமைப்படுகிறேன்! ஆனால், அந்த நிலை இங்கு இல்லையே என்பதால் வருத்தப்படுகிறேன்! வெடிகுண்டுகளை வீசி விடுதலை பெற முயற்சிப்பது, இருபதாம் நூற்றாண்டில் கையாளப்பட வேண்டிய ஜனநாயக முறை அல்ல!

" 'அப்படியானால், இந்தோ-சீனாவில் வெடி குண்டு வீசப்பட்டதே, எப்படி? நாகர் நாட்டிலே வெடிகுண்டு வீசப்படுகிறதே, எப்படி?' என்று கேட்க, நமது தோழர்கள் ஆசைப்படக் கூடும். அவர்கள் கரத்திலே அந்த வெடிகுண்டு சிக்கியதற்குக் காரணம், அந்தப் பக்கத்திலே எல்லாம் ஜப்பானியப் படையெடுப்பு நடந்து, ஜப்பானியர் விட்டுப் போன ஏராளமான ஆயுதங்கள் குவியலாகக் கிடைத்தன ; அவற்றைத்தான் ஹோசி-மின் பயன்படுத்தினார்! நாகர்கள் பயன்படுத்துகின்றனர்! இந்த தேசியப் போராட்ட வீரர்கள் ஜப்பானிய ஆயுதங்களை இன்னும் பயன்படுத்துகின்கின்றனர்!

"நம்முடைய தலைமுறையில்நாம் இனனும் வெடிகுண்டுகளைப் பார்த்தது இல்லையே! நம்முடைய காதிலே இதுவரை விழுந்திருக்கிற சத்தம 'எல்லாம, கோயிலில் வெடிக்கிற அதிர்வேட்டுச் சத்தமே தவிர, பீரங்கிச் சத்தம் விழுந்தது இல்லை. ஆகையினால், அந்த சத்தம் பற்றி புத்தகத்தில் மட்டும் படித்துவிட்டு நாம் வேட்டு முறையைக் கையாளலாம் என்றால், அதிலே 'வீரம்' இருக்கலாம் ; ஆனால், 'விவேகம்' சற்றுக் குறைவாக இருக்கும்! காரியத்திற்கு ஓரளவு பயன்படலாம்; ஆனால், இலட்சிய சித்திக்கு கடைசிவரையில் அது பயனபடாது!

" இன்னொன்று ஒட்டு முறை! அந்த ஒட்டு முறையைத் தான் காங்கிரஸ் கை யாண்டது! எது பலமாக இருக்கிறதோ அதோடு பலமாக ஒட்டிக்கொண்டு விடுதலை பெற்றுக்கொள்வது! பிரிட்டிஷாரோடு ஒட்டிக்கொண்டே காங்கிரசார் 'விடுதலை' பெற்றார்கள்.

" அதனால்தான், கொடைக்கானலில் இருக்கிற தேயிலைத் தோட்டம் இன்னும் வெள்ளைக்காரனுக்குச் சொந்தம்! இதர இடங்களிலுள்ள தேயிலைத் தோட்டங்கள், காப்பித் தோட்டங்களும் இன்றும் வெள்ளைக்காரனுக்குச் சொந்தம! கோடிக் கணக்கான இலாபந்தரக் கூடிய பெரிய பெரிய தொழிற்சாலைகள் இன்னும வெள்ளைக்காரனுக்குச் சொந்தம! தங்கத்தைத் தரும கோலார் சுரங்கம வெள்ளைக்காரனின் நிர்வாகத்திலே இருக்கிறது! பக்கிங்காம கர்நாடிக் ஆலை வெள்ளையர் நிர்வாகத்திலிருக்கிறது! மதுரையமபதி ஆர்வி மில் வெள்ளையனிடத்தில் இருக்கிறது! சென்னையில் உள்ள ஷா வாலெஸ் கம்பெனி வெள்ளையரிடத்தில் இருக்கிறது! ஏற்றுமதி —இறக்குமதி வியாபாரக் கோட்டங்கள் வெள்ளையரிடத்தில் இருக்கின்றன! இவைகளை எல்லாம வெள்ளைக்காரனிடத்தில் கொடுத்து விட்டு, அவனோடு ஒட்டிக் கொண்டு பெற்றதுதான், காங்கிரசார் பெற்ற 'சுயராஜ்யம்!' அதில்தான், மக்கள், சொல்லொணா அல்லல்களை அனுபவிப்பதை நாம் பார்க்கிறோம்!

" வேட்டும் பிரயோசனமில்லை ; ஒட்டும் பிரயோசனமில்லை என்றால் மிச்சமிருப்பது, 'ஓட்டு'த் தானே!

" 'நம்மாலே முடியுமா?' — என்று சில தோழர்கள் கேட்கிறார்கள் ; 'உன்னாலா முடியாது, தம்பி! உன்னால் முடியாவிட்டால் வேறு யாரால் முடியும்? நீ இதைக் கூடச் செய்யாவிட்டால் வேறு எதைத் தான் செய்யப் போகிறாய்? இதிலேகூட நம்முடைய பலத்தைக் காட்ட முடியவில்லை என்றால், வேறு எதிலே நாம் காட்டமுடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்."

[அவரது பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வரும்.]

உரிமை கோரி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மொழிச் சிக்கல் குறித்து அவர் பேசுகையில், 'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக ஆக்கப்படும் ; ஆனாலும், தமிழர் தம்மொழிக்கும் பாதுகாப்பு கிடைக்கும்' என்று இழுத்து இழுத்துப் பேசினாராம்!

'இது பற்றிய மசோதா அரசியல் சட்ட விதிகளுக்கு முரணானது' என்று கூறி எழுப்பப்பட்ட அவசரப் பிரேரபணைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

நடைபெற்ற தடியடிப் பிரயோகம்—சத்தியாக்கிரகிகள் மீது சிங்கள வெறியர் நடத்திய தாக்குதல் இவை பற்றிய ஒத்திவைப்புப் பிரேரபணைகளும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

தீவிர இடதுசாரி என்ற பெயரோடும், நேருவின் நண்பர் என்ற முத்திரையோடும் பதவி ஏற்ற பண்டார நாயகாவின் ஆட்சியில், இலங்கை மக்களில் மூன்றில் ஒரு பங்கான தமிழர்களுக்கு, மொழி விவகாரத்தில பெரியதோர் அநீதி இழைக்கப்படுகிறது என்பதை தமிழ் நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென இலங்கைத் தமிழர்கள் விரும்புகின்றனர்எனத்தெரிகிறது.

இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் சார்பில், தோழர் அஜீஸ் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், முதன் முதலாக, சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாவது என்ற ஏற்பாடு கண்டிக்கப்பட்டிருப்பதுடன், தமிழ் மொழிக்கும் சிங்களத்தைப் போல சமஅந்தஸ்து வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

மக்கள் சபைக் கூட்டம் முடிந்த பின் தமிழ் உறுப்பினர்கள் 'போலீஸ் வான்'கள் மூலம் வீடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர் ; ஆனால், அப்போதும அந்த 'வான்'களமீது சிங்கள வெறியர்கள் கல்லெறிந்து கலாட்டா செய்தனராம்.

சர்க்கார் அலுவலகங்களில் உள்ள தமிழர்கள பாடு பெரும்பாடாகி விட்டிருக்கிறது, மாலையில் வீடு திரும்புவதற்குள்!

தமிழர் இருவர் ஏறிவந்த கார் வழி மறிக்கப்பட்டு, அவர்கள் இருவரிடமுமிருந்த பொருள்கள பறிக்கப்பட்டதுடன்,காரையும தலை குப்புறக் கவிழ்த்தினராம, சிங்கள வெறியர்கள!

பெரும்பான்மையினரான சிங்களவர், சிறுபான்மை இனத்தவரான தமிழர்மீது இப்படி திட்டமிட்ட தாக்குதலை நடத்துவது தமிழர் உள்ளத்தில் பெரும் அச்சத்தை மூட்டியிருக்கிறது.

மேலும இத்தனை தாக்குதல்களையும் நடத்திய அந்த சிங்கள வெறியர்கள், மக்கள் சபையைவிட்டு வெளியே வந்த பிரதமர் பண்டாரநாயகாவை, 'நீடூழி வாழ்க' என வாழ்த்தினராம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.